

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (23.2.2026) முகாம் அலுவலகத்தில், புதுச்சேரி மாற்றுக் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் என். ரங்கன் மற்றும் அவரது மகள் சத்யா ஆகியோர் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் புதுச்சேரி கழக மாநில அமைப்பாளர் சிவா உள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2026) சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லகண்ணு அவர்களின் உடல்நலம் குறித்து அவரது குடும்பத்தினரிடம் விசாரித்து, மருத்துவரிடம் அவருக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். உடன் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன் ஆகியோர் உள்ளனர்.

### ‘திராவிடப் பெண்கள் பவர் எஞ்சின்’ முன்பு, உங்களின் ‘டப்பா எஞ்சின்’ தாக்குப் பிடிக்காது!

# கழகத்தின் மகளிர் படை, மாநிலம் முழுவதும் களமிறங்கி விட்டது!

## அதற்குச் சாட்சியான காட்சி இதோ!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, பிப்.24–**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:**



திராவிட மாடல் அரசின் 5 ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை: முதலில் கொச்சைப் படுத்தினார்கள்; அது ‘பூமராங்’ ஆனதால் தற்போது உரிமை கொண்டாடுகிறார்கள்!

அ.தி.மு.க.வின் அழுத்தமே நாம் 1.31 கோடி குடும்பத் தலைவிகளுக்கு 5 ஆயிரம் ரூபாயை உரிமைத்தொகையாக வழங்கக் காரணம் என்ற அரிய கண்டுபிடிப்பை உதிர்த்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர்.

பழனிசாமி அவர்களே, உங்கள் அழுத்தம் காரணமல்ல. “உங்கள் டெல்லி ஓனர்கள் தேர்தலைக் காரணம் காட்டி உரிமைத் தொகையைத் தடுத்து நிறுத்துவார்கள் என்ற சூழ்ச்சி தான் காரணம்!” இதனைத் தெளிவாக விளக்கித்தான் எனது சகோதரிகளின் கணக்கில் பணத்தை அட்வான்சாக வரவு வைத்திருக்கிறேன்.

பரவாயில்லை, நீங்கள் உரிமை கொண்டாடுகிறீர்கள் என்பதில் இருந்தே ‘திராவிட மாடல்’ சத்தமில்லாமல் நடத்திய surgical strike உங்கள் உறக்கத்தைக் கெடுத்து, இப்படி புலம்பும் அளவுக்கு பெரிய ‘ஹிட்’ அடித்துள்ளது எனப் புரிந்துகொள்கிறேன்.

Copy, paste அரசியல் என்பது காலங்காலமாக அ.தி.மு.க.வின் வாடிக்கை என்பதைத் தமிழ்நாட்டில் அனைவரும் அறிவார்கள். அதனால், புதுசா ஏதாவது சொல்லுங்க!

விடியல் பயணம், புதுமைப்பெண், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என ‘திராவிட மாடல்’ அரசின் மகளிருக்கான திட்டங்களை இல்லந்தோறும் எடுத்துக்கூற கழகத்தின் மகளிர் படை மாநிலம் முழுவதும் களமிறங்கி விட்டது. எங்கள் #DMKWomenPowerEngine முன் உங்க டப்பா எஞ்சின் தாக்குப்பிடிக்காது!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முதல்வர் பிறந்த நாள் – அன்னம் தரும் அமுதக் கரங்கள்! அமைச்சர் பி.கே. சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில்!

# வெற்றிகரமாக 365 நாட்கள் தொடர்ந்து - ஒரு ஆண்டு நிறைவு!

## திரு.வி.க. நகர் வடக்குப் பகுதியில் – திருமதி துர்கா ஸ்டாலின் உணவு வழங்கினார்!

சென்னை, பிப்.24-

“அன்னம் தரும் அமுதக்கரங்கள்” வெற்றிகரமாக தொடர்ந்து ஒரு ஆண்டு நிறைவு செய்து 365 வது நாளான நேற்று சிறப்பு அழைப்பாளராக இத்திட்டத்தை தொடங்கி வைத்த எங்களின் அன்பு கரம் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி, இத்திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் பாராட்டி சிறப்பு செய்தார்.







தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு கழகத் தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 18ஆம் தேதி வரை 365நாட்களும், நாள் ஒன்றுக்கு 1200 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில் காலை உணவு வழங்க திட்டமிடப்பட்டது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல்படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் திருமதி.துர்கா ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து சிறப்பித்தார். அந்த வகையில் 24ஆம் நாள் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர் கோவி. செழியன், 50வது நாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர். காந்தி, 75வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியம், 100வது நாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, 125வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், 150வது நாள் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர். ராஜேந்திரன், 175வது நாள் மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், 200வது நாள் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், 225வது நாள் சட்டம் மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ். ரகுபதி, 250வது நாள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், 275வது நாள் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, 300வது நாள் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, 325வது நாள் தகவல் தொழில்நுட்ப துறை மற்றும் டிஜிட்டல் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், 350 நாள் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்து கொண்டு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

“இந்நிகழ்ச்சியானது” வெற்றிகரமாக தொடர்ந்து ஒரு ஆண்டு நிறைவு செய்து 365-வது நாளான நேற்று (23.02.2026) சிறப்பு அழைப்பாளராக இத்திட்டத்தை தொடங்கி வைத்த துர்கா ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு வி.க.நகர் வடக்கு பகுதியில் பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி, இத்திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த மாநில நிர்வாகிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதிகளின் செயலாளர், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வட்டக் கழகச் செயலாளர் என அனைவரையும் பாராட்டி சிறப்பு செய்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, அ.வெற்றியழகன் ,ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா பி.கே. மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ் குமார், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி. ம க ா தே வ ன் , புனிதவதிஎத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: செ. தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், எம்.டி.ஆர் நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ். முரளி, எஸ்.ராஜசேகர், சரிதா மகேஷ் குமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், க.வினோத், எஸ்.தனசேகர், L.P.F.மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ் கான், P.விஜயகுமார், இரா. வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின்

# இணையதளத்தில் புகார் மேலாண்மை அமைப்புக்கான கூடுதல் வசதி!

## பொது மக்கள் பயன்பாட்டிற்காக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, பிப்.24







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.2.2026) சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் www.tnscw.tn.gov.in என்ற இணையதளத்தில் புகார் மேலாண்மை அமைப்பிற்காக (Complaint Management System) உருவாக்கப்பட்டுள்ள கூடுதல் வசதியினை பொது மக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத்தின் www.tnscw.tn.gov.in இணையதளமானது மகளிர் தங்கள் புகார்களை பதிவு செய்யவும், அப்புகார்களின் நடவடிக்கை விவரம், விசாரணை நிலவரம் ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆணையம் வாயிலாக எடுக்கப்படும் நடவடிக்கைகளின் வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யவும், புகார் மனுக்களின் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ளவும், புகார்தாரர்கள் கண்காணித்திடவும் இயலும்.

பெறப்படும் புகார் மனுக்கள் அனைத்தும் இணையதளம் வழியாகவே தொடர்புடைய அலுவலர்களுக்கு அனுப்பப்படும். கள அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்ட பின், அதன் விவரத்தையும் இந்த இணையதளம் வழியாகவே சமர்ப்பிக்க ஏதுவாக இச்செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணைய தலைவி திருமதி அ.ச. குமரி, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளிதரன், சமூக நலத் துறை இயக்குநர் திருமதி மா.செள. சங்கீதா, தமிழ்நாடு பெண்கள் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட இயக்குநர் (TNWeSafe) திருமதி ஆஷா அஜித், மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி. – கலாநிதி வீராசாமி எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

# தாம்பரம் மாநகரக் கழகம் சார்பில் முதல்வர் பிறந்தநாள் - சிட்லப்பாக்கத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, பிப்.24

தாம்பரம் மாநகர திமுக தாம்பரம் சட்டமன்றத் தொகுதி நடத்தும், மார்ச் 1தமிழர் எழுச்சி நாள், தமிழ்நாடு முதல் அமைச்சர் நம் உயிரான கழகத் தலைவர் அவர்களின்,பிறந்தநாள் விழா திராவிட மாடல் நல்லாட்சியின் ஐந்தாண்டு சாதனை விளக்க தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம், இன்று (2402 2026 செவ்வாய்கிழமை) தாம்பரம் சிட்லபாக்கம் அண்ணா தெரு சந்திப்பு (ரவுண்டானா அருகில்) மாலை 5.00 மணியளவில் எனது தலைமையிலும்., பகுதி கழகச் செயலாளர் இரா.சுரேஷ் வரவேற்புரையிலும் மாநகர கழக நிர்வாகிகள் தாம்பரம் மேயர்.க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், இரா. நரேஷ்கண்ணா, வ.விஜயரங்கன், பொ.சதாசிவம், முன்னிலையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழகப் பொருளாளர் கழக நாடாளுமன்ற மக்களவை குழுத் தலைவர், டி.ஆர்.பாலு,பி.எஸ்.சி எம்.பி, கழக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்,காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், தா.மோ. அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிள் பங்கேற்கின்றனர்.





நாமக்கல் கிழக்கு மாவட்டம், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதியில், நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, சிறப்புரையாற்றினார். இதில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.ராஜேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், ஏ.அசோக்குமார், மு.வாசிம்ராஜா, மூலனூர் எஸ்.கார்த்திக், ஏவிஆர். கோபால்ராம், சுரேஷ் ஜெ.மனோகரன், வே.கௌதமன், முகமது இஸ்ரத், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்கள் வ. முரளி, த.ரமேஷ் பங்கேற்றனர்.

### ஆலந்தூரில் ரூ.18.64 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மாளிகை

# ஆதம்பாக்கத்தில் அம்பேத்கர் திரு உருவச் சிலை! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

### டி.ஆர். பாலு – தொல் திருமாவளவன் – ஆர்.எஸ்.பாரதி – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள்!

சென்னை,பிப்.24-

மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் வருமாறு:

ஆலந்தூரில் ரூ.18.64 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மாளிகை மற்றும் ஆதம்பாக்கத்தில் அம்பேத்கர் திரு உருவச் சிலையை இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைக்கிறார். இவ்விழாவில் டி.ஆர். பாலு, தொல் திருமாவளவன், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் பங்கேற்கின்றனர்.



ஆலந்தூரில் புதுத்தெருவில் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சார்பில் ரூ.18.64 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மாளிகை திறப்புவிழா இன்று மாலை 5.00 மணியளவில் நடைபெறுகிறது. இவ்விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஆதம்பாக்கம், அம்பேத்கர் திடல் முன்பு அமைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் திருவுருவ வெண்கலச் சிலை திறப்பு விழா இன்று 23-ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசன் தலைமையில் நடைபெறுகிறது.

கழக இளைஞர் அணி செயலாளர் - மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு அம்பேத்கர் திருவுருவ வெண்கலச் சிலையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளன் இவ்விழாவில் கலந்து கொண்டு கல்வெட்டை திறந்து வைக்கிறார். இந்த விழாவில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, பகுதிச் செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், மாமன்ற உறுப்பினர் பூங்கொடி ஜெகதீஸ்வரன், வட்டச் செயலாளர் ஏ.வேலவன் மற்றும் டாக்டர் அம்பேத்கர் சிலை பராமரிப்பு பொது நலச் சங்க நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில், பி.தேவேந்திரன் நன்றியுரை ஆற்றுகிறார். திருமண மாளிகை மற்றும் அம்பேத்கர் சிலை திறப்புவிழா ஆகிய 2 விழாக்களிலும் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.